# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 44 / 2022 நாள்: 14.02.2022

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் - 2022

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் பரப்புரை 17.2.2022 அன்று மாலை 6.00 மணியுடன் முடிவடைகிறது. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு

தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் நியாயமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகள் என 648 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே கட்டமாக வாக்குப்பதிவு 19.02.2022 அன்று நடைபெற உள்ளது. **தேர்தல் நடத்தை விதிகளின்படி, அரசியல் கட்சிகளின் தேர்தல் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் ஏனைய பிரச்சாரங்கள் அனைத்தையும் வாக்குப்பதிவு முடிவுபெறும் நேரத்திலிருந்து 48 மணி நேரத்திற்கு முன்பாக, அதாவது 17.02.2022 மாலை 6.00 மணியுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவுக்கு வருகிறது.**

தேர்தல் பிரச்சாரம் முடிவிற்கு வந்த பின்னர், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பில் வாக்காளர்கள் அல்லாத, வெளியிலிருந்து அழைத்து வரப்படும் அரசியல் கட்சி பிரமுகர்கள் / கட்சித் தொண்டர்கள் அனைவரும் அந்த உள்ளாட்சி பகுதியில் இருந்து வெளியேறி விட வேண்டும் என்றும், அவ்வாறு வெளியேறாதவர்கள் தேர்தல் நடத்தை விதிகளை மீறியதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தினால் தெரிவிக்கப்படுகிறது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

14/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்